எம்.சி.ஓ.பி எண்: 123/2024 தேதி: 10.11.2025

மசா. : 1

பெயர் : நஷீம் முனிஷா

க /பெ. : ஷேக் கவுஸ்பாஷா

வயது : 59

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் கணவருக்கு வயது 60. சந்தா வசூல் செய்வார். டெயிலர் வேலையும் செய்வார். இருசக்கரவாகனத்தில் விபத்து நடந்த சமயம் சென்றார். தலைக்கவசம் அணிந்திருந்தார். விபத்து சமயம் அவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயம் என் கணவர் ஓட்டுநர் வைத்திருந்தார். அந்த ஓட்டுநர் உரிமம் எப்போது வாங்கினார் என்று தெரியாது. என் கணவர் விபத்து சமயம் வலது பக்கம் திரும்புவதற்கு பதிலாக இடது பக்கம் திரும்பி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் நான் விபத்தை நேரில்பார்க்கவில்லை. என் கணவர் திடீரென்று இடது பக்கம் திரும்பி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்த இடத்தில் போலீஸ்கார் இருந்தாரா என்று எனக்கு தெரியாது. போன் மூலம் என்மகனுக்கு தகவல்தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகு தெரியும் . என் மகன் பெயர் இப்ராகிம். என் மகனும் விபத்தை நேரில் பார்க்கவில்லை. வசந்த பவன் ேஹாட்டலில் உள்ளவர்கள் சொன்னார்கள். போலீஸ் உடனே வழக்கை பதிவு செய்தார்களா என்று தெரியாது. என்கணவருக்கு கண் பார்வை காது நன்றாக கேட்கும். சந்தா வசூல் செய்வதற்காக கிளாம்பாக்கம் வண்டாலுர் அருகே சென்றார், அப்போது விபத்து விபத்து நடந்ததுள்ளது. என் கணவர் சாலை விதிகளை சரிவர மதிக்கமால் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்து என் கணவரின் அஜாக்கிருதையால் நடந்துள்ளது என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரி. மனுதாரர் 2,3 நபர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் சரி. என்னுடைய வயது ஆதார் கார்டின் படி 60 என்றால் சரி. என் கணவரின் வயதை நிரூபிக்க அவருடைய பிறப்பு சான்று மற்றும் ஆதார் கார்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அதிக இழப்பீடு பெறுவதற்காக நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2,3 மனுதாரர்கள் திருமணம் ஆகி தனியாக வசிப்பதால் அவர்கள் என் கணவரின் வருமானத்தை சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. 2,3 மனுதாரர்கள் பொறுத்தவரை மனு

தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. பிரமாணவாக்குமூலத்தில் என் கணவரின் வருமானம் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 10 ஆவணம் லெட்டர் பேடில் கொடுக்கப்பட்டுள்ள ஆவணம் என்பதால் அது இந்த விபத்திற்கு தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனவே இந்த ஆவணம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. என் கணவரின் ஓட்டுநர் உரிமம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் கணவருக்கு வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் முறையான தலைக்கவசம் அணியாமல்சென்று அவருடைய அஜாக்கிருதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கணவரின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கரவாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது தெரியவரும் என்பதால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.